1981 ஏப்ரல் 21]

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, ஊனமுற்ற பெண்களைத் திருமணம் செய்ய முன் வருகின்ற ஆண்களுக்கும் அதேபோன்று உடல் ஊனமுற்ற ஆண்களைத் திருமணம் செய்ய முன்வருகின்ற பெண்களுக்கும் சிறப்பான பரிசுத் திட்டம் இந்த ஆண்டிலே அரசின் சார்பாக அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதை இந்த ஆண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவர் அவர்களே. அரசின் சார்பாக இந்த ஆண்டு புதியதாகச் செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் நிலையத்தை ஏற்படுத்துவது பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதல் கேள்வியிலேயே இதுபற்றி நான் கேள்வி கேட்டிருந்தேன். அந்த நிலையங்களில் ஒன்றை வாணியம்பாடியில் துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அவை எங்கெங்கே துவங்குவது என்பது பற்றிய சரியான விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் செயற்கை உறுப்புக்கள் தயாரித்து வழங்குவதற்கு இரண்டு புதிய நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன என்ற தகவல்தான் இருக்கின்றது.

திரு. எம். அண்ணாதாசன் : தலைவர் அவர்களே என்னுடைய திருவரும்பூர் தொகுதியில் மிகப் பெரிய கனரகத் தொழிற்சாலை இருக்கின்றது. உடல் ஊனமுற்றவர்கள் ஆண்டு என்று அழைக்கப்படுகின்ற இந்த ஆண்டிலே அந்தத் தொழிற்சாலையில் அதிகமான அளவிலே உடல் ஊனமுற்றவர்களை வேலைக்குச் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொழிற்சாலை மத்திய அரசைச் சேர்ந்தது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.

*வினா எண். 830—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வங்கிகள் மூலம் கடன் வாங்கி கால்நடைகள் வாங்குவோருக்குள்ள கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தை மற்றவர்களுக்கும் அவர்கள் விருப்பத்தின் பேரில் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

[1981 ஏப்ரல் 21

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது அமுல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : சொந்தப் பொறுப்பிலே கால்நடைகள் வைத்திருப்பவர்கள் அவர்களின் கால்நடைகளை இன்சூர் செய்துகொள்ள விரும்பினால் இன்சூரன்ஸ் நிலையங்களின் மூலமாக தங்கள் கால்நடைகளை இன்சூர் செய்துக்கொள்ள ஏற்கெனவே வசதி உள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, வெறும் கால்நடைகள் என்று இல்லாமல் கால்நடைச் செல்வங்கள் என்ற அளவிலே அவற்றை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தை உருவாக்குகின்ற வகையில் அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியம் தொகைக்கு மானியங்கள் வழங்க ஏதாவது வழிவகைகளை அரசு செய்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, சமுதாயத்தில் இருக்கின்ற நலிந்த பகுதியினர், சிறு உழவர்கள், குறுநில உழவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களின் ஊதியத்தை உயர்த்தும் பொருட்டு சில சிறப்புத் திட்டங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்கள் மூலமாக வழங்கப்படும் கால்நடைகளை இன்சூரன்ஸ் செய்ய வழிவகைகள் அந்தத் திட்டங்களில் உள்ளன. தனிப்பட்டவர்கள் தங்களது கால்நடைகளை இன்சூர் செய்திருந்தால் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தொகைக்கு கீழ்கண்டவாறு ஆண்டுத் தவணைகளைச் செலுத்த வேண்டும் ;

ஐம்பதுக்குக் குறைவான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·25 சதவீதம்.

ஐம்பது முதல் 250 வரையான கால்நடைகளை இன்சூர் செய்தல் 3·20 சதவீதம்.

[முந்பகல் 10-10]

இருநூற்று ஐம்பத்தொன்று முதல் ஆயிரம் வரையில்லான கால்நடைகளை இன்ஷுயூர் செய்தால் 3·15 சதவீதம் ; 1001-லிருந்து 5,000 வரையிலான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·10 சதவீதம் ; 5001 லிருந்து 10,000 வரையிலான கால்நடைகளை இன்சூர் செய்தால் 3·5 சதவீதம் ; 10,000-க்கு மேற்பட்டால் 3 சதவீதம். எருதுகளுக்கு 3·50

1981 ஏப்ரல் 21]

சதவீதம், வங்கிகள் மூலம் கடன் வாங்கி கால்நடைகள் வாங்கினால், ½ சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரையில் கால்நடைகளுக்கு ஏற்ப, பிரிமியத் தொகையில் தள்ளுபடி செய்யப்படும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரும் கால்நடை பண்ணைகளில் உள்ள கால்நடைகளுக்கு, இந்த இன்சூரன்ஸ் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போதே அதைக் கூறிவிட்டேன்.

காங்கேயம் மாடுகளின் இனவிருத்தித் திட்டம்.

*வினா எண். 831—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'' காங்கேயம் மாடுகளின் உற்பத்தி மற்றும் இனவிருத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அரசு ஆணை எண் 2457, வேளாண்மை, நாள் 30—12—1980-ல், பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப்பண்ணை ஒன்று நிறுவ அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியமாக இருக்கும் மனிதர்களைப் பார்த்து காங்கேயம் காளைபோன்று கொழு கொழுவென்றிருக்கிறாய் என்று சொல்வார்கள். அப்படி பிரசித்திப்பெற்ற அந்த இன காங்கேய மாடுகளை அதிகமான அளவில் இனவிருத்தி செய்யும்வகையில், தமிழ்நாடு பூராவும் அந்த இனங்களை வளர்க்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த முடியாது. பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டையில் காங்கேயம் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை நிறுவ இப்பொழுதுதான் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பழைய கோட்டை கால்நடை பண்ணையில், தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தின் கீழ்